அ.வ.எண்: 38/2017 நாள்: 05.11.2025

வா.சா.1 – மாயழகு

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. வெங்கடாசலம் செட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை நான் எத்தனை பேரிடம் இருந்து கிரயம் வாங்கினேன் என்றால் மேற்படி வெங்கடாசலம் செட்டியார் சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பே நாங்கள் தான் அனுபவம் செய்து வந்தோம். தாவா சொத்து வெங்கடாசல செட்டியாருக்கு பாத்தியப்பட்டிருந்தாலும் அதற்கு முன்பே நான் அனுபவத்தில் இருந்ததால் எனக்கு அனுபவ பாத்தியம் வந்துள்ளது. வா.சா.ஆ.6 ஆவணத்தில் வெங்கடாசல செட்டியார் அனுபவத்தில் இருப்பதாக குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் சரிதான். வாசாஆ.6 ஆவணத்தில் என்ன டவுன் சர்வே எண் காட்டப்பட்டுள்ளது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.6 ஆவணத்தில் தாவா சொத்தின் நீள அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.
2. மேற்படி வா.சா.ஆ.6 ஆவணம் ஏற்பட்ட அதே தேதியில் தான் எனது சகோதரரான கணேசன் என்பவர் நான் கிரயம் பெற்ற சொத்திற்கு கீழ்புறம் உள்ள சொத்தை கிரயம் பெற்றார் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு எவ்வளவு சொத்து பாத்தியம் என்றால் மொத்தம்38 சென்ட் பாத்தியம் ஆகும். வா.சா.ஆ.8 ஆவணத்திலும் நீல அகலம் காட்டப்படவில்லை என்றால் சரிதான். (வாதி/சாட்சி தானாக முன்வந்து

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.11.05 16:06:41 +0530

தனக்கும் இந்த வழக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் தாவா வழக்கை தான் தாக்கல் செய்யவில்லை என்றும் கூறினார்.) நான் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆவேன். வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள டவுன் சர்வே எண்கள் இரண்டும் ஒன்றுதான் என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களில் எந்த ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்காக தாவா வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் ஆவுடையப்பன் இடமிருந்து கிரயம் பெற்ற சொத்தான B1/32/1–க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்படி ஆவுடையப்பனிடமிருந்து எவ்வளவு விஸ்தீரனம் உள்ள சொத்தை கிரயம் பெற்றேன் என்றால் 17.5 சென்ட் ஆகும் மேற்படியா அதே சொத்தின் கீழ் புறம் உள்ள சொத்தை தான் எனது தம்பி கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான் மேற்படி என் தம்பிக்கு கிரையம் பெற்ற சொத்துக்கும் இதே டவுன் சர்வே எண் தான் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற சொத்துக்கும் என் தம்பி கிரையம் பெற்ற சத்துக்கும் சேர்த்து எவ்வளவு அடி, நீள, அகலம் என்று எனக்கு தெரியாது.

3. **1.** நீதிமன்ற கேள்வி:

தாவா வழக்கை யார் தாக்கல் செய்தார்கள்?

பதில் – தாவா வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை எனக்கு தற்போது தான் தாவா வழக்குகுறித்த விபரங்கள் தெரிய வருகிறது.

**2.** நீதிமன்ற கேள்வி: பிராதில் உள்ள கையெழுத்து உங்களுடையது தானா?

பதில் – கையெழுத்து என்னுடையது தான் என்னுடைய தம்பியின் மகன் வழக்கை தாக்கல் செய்தான்.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.11.05 16:06:49 +0530

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.11.05 16:06:55 +0530